**<u>DEPOSITION OF WITNESS</u>**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF - CUM JUDICIAL MAGISTRATE THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **301/2019**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW2
Defendant :
Court :

Name : சக்தி
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

29.8.2024 **CC 301/2019**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் ஆவாரங்காட்டில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 சத்தியேந்திரன் எனது கணவர் ஆவார். சாட்சி பாண்டி எனது சித்தப்பா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். தேதி மாதம் நினைவில்லை. சுமார் 13 வருடங்களுக்கு முன்பு இரவு 8.00 மணியளவில நானும், எனது கணவர், பாண்டி ஆகியோர்கள் எங்கள் வீட்டில் இருந்தபோது கூட்டமாக சில நபர்கள் வந்து எங்களிடம் வாக்குவாதம் செய்தார்கள். அந்த கூட்டத்தில் இருந்த ஒரு நபர் வாளால் எனது கணவரின் இடது முழங்கையிலும், இடது விலாவிலும் வெட்டியதில் அவருக்கு காயம் ஏற்பட்டது. அந்த நபர் யார் என்று தெரியவில்லை.

2. தள்ளுமுள்ளுவில் என் சித்தப்பா பாண்டி கீழே விழுந்ததில் அவருக்கு கால்பாதத்தின் மேல் காயம் ஏற்பட்டது. மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். ஆஜர் எதிரிகளும் அங்கிருந்ததால் சந்தேகத்தின் பேரில் புகார் கொடுத்துவிட்டார். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ் சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நாங்கள் எதிரிகளுடன் சமரசமாகி இந்நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல்

செய்துள்ளோம் என்றால் சரிதான். எதிரிகள் எனது உறவினர்கள் ஆவார்கள். எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் சிறு சிறு பிரச்சனைகாரணமாக முன்விரோதம் இருந்து வந்தது என்றும், கடந்த 18.9.2011–ம் தேதிஇரவு சுமார் 10.00 மணியளவில் நான், எனது கணவர், என் சித்தப்பா பாண்டி எங்கள் வீட்டிற்குள் இருந்தபோது எதிரிகள் எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து 1–ம் எதிரி மாயச்சாமி வாளால் என் கணவரின் இடது முழங்கையில் வெட்டினார் என்றும், பெரியசாமி என் கணவரின் இடது விலாவில் வெட்டினார் என்றும் அதில் என் கணவருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

2) 1–ம் எதிரி என் சித்தப்பா பாண்டியை வலது காலில் வெட்டி ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் 3–ம் எதிரி செந்தாமரை வீட்டுக்கு முன்பக்கம் உள்ள ஓட்டை உடைத்துவிட்டார் என்றும், எனது போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றும், எதிரிகள் எனது உறவினர்கள் என்பதாலும் அவர்களுடன் தற்போது சமரசமாகிவிட்டதாலும் எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.